# நடப்பு நிகழ்வுகள் மார்ச் 24.03.2018

- உலகின் கடைசி வெள்ளை ஆண் காண்டாமிருகம்'சூடான்'' உயிரிழந்தது. கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கும் சென்யாவின்ஒல் பெஜேட்டா என்னும் விலங்குகள் காப்பகத்தில் மிகவும் பாதுகாப்புகள் மத்தியில் இருந்த வெள்ளை ஆண் காண்டாமிருகம் உயிரிழந்தது.
- பீகார் ஆளுநர் திரு சத்தியபால்மாலிக்கை, ஒடிசா ஆளுநர் பொறுப்பையும் கவனிக்க இந்தியக் குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.
- உலக சிட்டுக்குருவி தினம் (Word Sparrow Day) மார்ச் 20 நோக்கம் 2018 'நான் சிட்டுக்குருவிகளை நேசிக்கிறேன்'' (I Love Sparrows).
- சர்வதேச மகிழ்ச்சி தினம் (International Day of Happiness)- மார்ச் 20 நோக்கம்: Share Happiness.
- இன வேறுபாடுகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் (International Day For the Elimination of Social Diceniminational) – மார்ச் 21 நோக்கம்: சகிப்புத்தன்மை, ஒற்றுமை மற்றும் பன்முகத் தன்மை மீதான மரியாதையை வளர்ப்போம்.
- உலக கவிதை தினம் (Word Poetry Day) மார்ச் 21.
- சர்வதேச காடுகள் தினம் (International Day of Forests) மார்ச் 21. நோக்கம் 2018 காடுகள் மற்றும் நகரங்களின் நிலையான வளர்ச்சி (Forests and Sustainable Cities)
- உலக மனநலிவு நோய் தினம் (Word Down Sundrome Day) மார்ச் 21 நோக்கம்: மனநலிவு நோய் கொண்டோர், எவ்வாறு பள்ளிகள், பணிபுரியும் இடங்கள், சமுதாயம், பொது வாழ்வு, கலாச்சாரம், ஊடகங்கள், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டில் பங்களிப்பு வழங்கலாம் (How People With down Syndrome Can Contribute in Schools> Work Places, Community, Public and Political life Culture, Media, Recreation, leisune and Sport)
- "ஆபெல் பரிசு 2018" (Abel Prrize 2018) கணிதத்துறையில் வழங்கப்படும் மிக உயரிய அபெல் பரிசு இந்த ஆண்டு கனடாவைச் சேர்ந்த கணித அறிஞர் ராபர்ட் லாங்க்லாண்ட்ஸ்க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நார்வே அறிவியல் அகாதமியினால் ஆபெல்இன் நினைவாக வழங்கப்படுகிறது.
- விராட்கோலி, தீபிகா படுகோனுக்கு ரசிகர்களால் அதிகம் பயன்படுத்தும் இன்ஸ்டாகிராம் கணக்கு என்கிற விருது வழங்கப்பட்டுள்ளது.
- பெண்களை படிக்க வையுங்கள் என்ற சர்வதேச தொண்டு நிறுவனம் (Educate Girls) விளம்பர தூதுவராக இந்திய பாலிவுட் நடிகை "காத்தினா கை.ஃப்" நியமிக்கப்பட்டுள்ளார்.
- உலகின் மிக வேகமான "காற்று சுரங்கம்" (Wind Tunnel) சீனாவில் அமைக்கப்பட்டு வருகிறது. விண்களங்களை பரிசோதிக்க வடிவமைக்கப்பட்டுள்ள இந்த காற்று சுரங்கமானது 30625kph வேகத்தில் (25 Times Fastter than Wind) இயங்கும்.